---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் உள்ளிட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது தகவல்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முடியுமான அளவிற்கு பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் நோக்கில் ஆணைக்குழுவின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க ஆணைக்குழு செயற்பட்டுள்ளதா எனவும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும்.

1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக் கான தொடர்பு.	**இணக்கமின்மை**	**முகாமைத்துவ கருத்துரை**	**பரிந்துரை**
2021 நவம்பர் 16, தேதியிட்ட 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை			

(i) நிறுவன ஆளுகை குறித்த வழிகாட்டுதல்கள்

• பிரிவு 2.6	பிரதான நிறைவேற்று அதிகாரி அல்லது நிறுவனத்திற்குள் ஏற்கனவே வேறு பணியில் ஈடுபட்டுள்ள வேறு எந்த ஊழியரையும் பணிப்பாளர் சபையின் செயலாளராக நியமிக்கக்கூடாது என்றாலும், ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சபைச் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.	நிர்வாகத் தரங்களுடன் சீரமைப்பை உறுதி செய்வதற்கும், பங்குத் தெளிவை மேம்படுத்துவதற்கும், ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் மாற்று கட்டமைப்பை இந்த நிறுவனம் பரிசீலிக்கும்.	பொது முயற்சிகள் சுற்றறிக்கை விதிகளின் படி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
• பிரிவு 3.2	2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த செயலாற்றல் மதிப்பாய்வுக் கூட்டங்கள் (APRM) இந்த கணக்காய்வு அறிக்கையின் தேதி வரையிலும் நடத்தப்பட்டிருக்க வில்லை, இருப்பினும் இந்த கூட்டங்கள் ஐந்தொகைத் தேதியைத் தொடர்ந்து ஐந்து மாதங்களுக்குள்ளும் பாராளுமன்றத்தில் ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரும் நடத்தப்பட வேண்டும்.	2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் அறிக்கை ஏற்கனவே நிதி அமைச்சிற்கு (MoF) சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கை பாராளு மன்றத்தால் அங்கீகரிக் கப்பட்டுள்ளது. வழிகாட்டுதல்களுக்கு இணங்க APRM சரியான நேரத்தில் நடத்தப்படுவதை உறுதிசெய்ய, SEC ஆனது MoF உடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்கும்.	- மேற்படி -
• இணைப்பு III	2024 ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையில் இடர் மதிப்பீடு மற்றும் தணிப்பு உத்திகள், நிதி செயலாற்றல் பகுப்பாய்வு மற்றும் முந்தைய 10 ஆண்டுகளுக்கான நிதி சிறப்பம்சங்கள் உள்ளிட்ட பல முக்கிய வெளிப்பாடுகள்	தற்போதைய ஆண்டு அறிக்கையில் மூன்று நிதியங்களின் நிதி செயலாற்றல் சேர்க்கப் பட்டுள்ளதுடன் எதிர் காலத்தில், நிறுவனத் தின் நிதி செயலாற்ற லும்	- மேற்படி -

	சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந்தப் பகுதிகளைத் தவிர்ப்பது வருடாந்த அறிக்கையின் முழுமையை பாதிப்பதுடன் முடிவெடுப்பதை எளிதாக்குவதில் அதன் செயல்திறனைக் குறைக்கின்றது.	அதனுடன் சேர்க்கப்படும். முந்தைய 10 ஆண்டு களுக்கான இடர் மதிப்பீடு மற்றும் தணிப்பு உத்திகள் மற்றும் நிதி சிறப்பம்சங்களும் அடுத்த ஆண்டு முதல் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்படும்.	
அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக் கான செயல்பாட்டு கையேடு			
பிரிவு 6.6	நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் ஆண்டு அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2024 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டு அறிக்கை கணக்குகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட. டிருக்கவில்லை.	நிதி அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. இருப்பினும், வரைவு ஆண்டு அறிக்கை ஒரே நேரத்தில் சமர்ப்பிக்கப் படவில்லை. எதிர்கால ஆண்டுகளில் இரண்டு ஆவணங்களும் ஒன்றாக சமர்ப்பிக்கப்ப டுவதை உறுதி செய்வதற்கு ஆணைக் குழு உறுதியளிக்கிறது.	- மேற்படி -

2. நிதிசார் மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டுக்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகள், வருமானத்துக்கு மிகையான செலவினத்துக்காக செஸ் நிதியத்திலிருந்து மாற்றீடு செய்யப்பட்ட தொகையினை கணக்கிலெடுப்பதற்கு முன்னர் ரூபா 645,930,836 பற்றாக்குறையை ஏற்படுத்தியிருந்ததுடன் முன்னைய ஆண்டின் நிதிப் பற்றாக்குறை ரூபா 446,662,381 ஆகும். ஆதன்படி, நிதி

விளைவுசுகளில் ரூபா 199,268,455 பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பற்றாக்குறை அதிகரிப்பதற்கான முக்கியக் காரணம், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் முறையே 164,073,632 மற்றும் ரூபா 38,013,834 தொகைகளால் FSMP இலிருந்து கிடைத்த விளைவுகளின் அடிப்படையிலான வருமான இழக்கப்பட்டமை மற்றும் செயற்பாட்டுச் செலவினம் அதிகரித்தமையே ஆகும்.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின், முக்கிய வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு செய்யப்பட்டு அவற்றின் அதிகரிப்புகள் அல்லது குறைவுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

	2024	**2023**	**வேறுபாடு சதவிகிதத்தில்**
	ரூபா	**ரூபா**	**%**
ஆணைக்குழுவின் வருமானம்			
அனுமதிப்பத்திரக் கட்டணம்	25,123,028	4,100,649	513%
கல்வி நிகழ்ச்சித்திட்டம்	12,836,609	11,629,061	10%
அரசாங்க மானியம் (FSMP)	12,365,239	176,438,871	(93)%
ஆணைக்குழுவின் செலவினம்			
பதவியணியினர் சம்பளம்	431,513,003	393,499,169	10%
நிர்வாக மற்றும் தாபனச் செலவினம்	256,769,019	236,006,969	9%
மூலதனச் சந்தை அபிவிருத்திச் செலவினம்	37,907,073	36,029,791	5%

அ. உலக வங்கியின் நிதியளிக்கப்பட்ட நிதித்துறை நவீனப்படுத்தல் செயற்திட்டத்தின் (FSMP) ஒரு பகுதியாக, பின்வரும் இரண்டு கூறுகளின் கீழ் ஆணைக்குழுவிற்கு நிதி கிடைத்திருந்தது.

கூறு I – பெறுபேறுகள் சார்ந்த நிதி கூறு

இணைக்கப்பட்ட பெறுபேறுகள் (DLRs) என நிர்ணயிக்கப்பட்ட அடையாளம் காணப்பட்ட கொள்கை சீர்திருத்தங்களை வெற்றிகரமாக முடித்தவுடன் உலக வங்கியால் மேற்கொள்ளப்படும் விநியோகம்- ஒதுக்கப்பட்ட நிதி SEC க்கு வழங்கப்பட்டது. அதன்படி, கூறு I இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கொள்கை நடவடிக்கை உருப்படிகளையும் SEC வெற்றிகரமாக நிறைவு செய்து, மொத்தம் USD 2 மில்லியன் (ரூபா 533,396,869.32 க்கு சமம்) ஒதுக்கப்பட்ட நிதியைப் பெற்றது, இதில் இறுதிக் கட்டணமான ரூபா 164,073,632.20 தொகை 24.03.2023 அன்று SEC க்கு கிடைத்தது.

கூறு II – முதலீட்டு அடிப்படையிலான நிதி கூறு

FSMP இன் கூறு II இன் கீழ், அடையாளம் காணப்பட்ட பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவைகளை பெறுவதற்கும் பணியாளர் திறன் மேம்பாட்டிற்கும் செயலகத்திற்கு நிதி கிடைத்தது. செயற்திட்டம் முடிவடையும் நேரத்தில், உலக வங்கி SEC க்கு கூறு II இன் கீழ் USD 519,059.54 (இலங்கை ரூபாய் 163,324,066.66 க்கு சமம்) வழங்கியுள்ளது. பொருட்களை வாங்குவதற்காக பெறப்பட்ட நிதி ஒரு மானியமாகக் கருதப்பட்டு, நிதி நிலை அறிக்கையில் அதன் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதும் அதை கடனாகக் குறைப்பதன் மூலம் ஒத்திவைக்கப்பட்ட வருமானமாகக் காட்டப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2024 ஜனவரி 10 தேதியிட்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இல. 01/2024 இன் படி, அத்தியாவசியமற்ற அனைத்து செலவுகளையும் சிக்கனமான முறையில் உரிய கட்டுப்பாட்டுடன் செய்ய வேண்டியிருந்த போதிலும், மீளாய்வு ஆண்டில் ஆணைக்குழுவால் ரூபா 8,489,239 மதிப்புள்ள ஊழியர் நலச் செலவுகள் செய்யப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டதுடன், இதில் கிறிஸ்துமஸ் விருந்துக்கு ரூபா 6,275,880 தொகையும், பிரித் செலவுகளுக்கு ரூபா 1,768,083.47 தொகையும், பொழுதுபோக்கு மற்றும் பரிசுகளுக்கு ரூபா 194,617 தொகையும் இறுதிச் சடங்கு ஏற்பாடுகளுக்கு ரூபா 51,020 தொகையும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஊழியர்களுக்கான பழக் கூடைகளுக்கு ரூபா 35,738 தொகையும் பிரியாவிடை பரிசுகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு ரூபா 163,900 தொகையும் உள்ளடங்கியிருந்தன. இவை மேற்கூறிய சுற்றறிக்கையின் விதிகளுக்கு முரணானவையாகும்.	பயிற்சி பெற்ற பணியாளர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் பயனுள்ள ஒழுங்குமுறை நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கும் முக்கிய காரணிகளான ஊழியர்களின் மன உறுதி, நிறுவன கலாச்சாரம் மற்றும் ஊழியர் நல்வாழ்வை வலுப்படுத்த இந்த செலவுகள் செய்யப்பட்டன. இந்தச் செலவினங்கள் SEC இன் ஊழியர் ஈடுபாடு மற்றும் தக்கவைப்பு உத்தியின் ஒரு பகுதியாவதுடன் அவை நிறுவன நன்மைகளை வழங்குவதால் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் களிலிருந்து வேறுபடுகின்றன. 1997 முதல் ஒரு பாரம்பரியமாக காணப்படுகின்ற வருடாந்த கிறிஸ்துமஸ் ஒன்றுகூடலானது 2019க்குப் பின்னர், அதிக ஊழியர்களின் வருவாயை நிவர்த்தி செய்வதற்கும், சக நிறுவனங்களில் உள்ள நடைமுறைகளைப் போலவே குழு ஒற்றுமையை ஊக்குவிப்பதற்கும் மீண்டும் தொடங்கப்பட்டது. சில செலவுகள் செயலகத்தின் செயல்பாடுகளுக்குத் தேவையான உத்தியோகபூர்வ உறவுகள் மற்றும் ஒழுங்குமுறை ஒத்துழைப்பைப் பராமரிப்பதோடு தொடர்புடையவை. அனைத்து செலவினங்களும் ஆண்டு மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு, SEC சட்டத்தின் பிரிவு 156(2) இன் படி செய்யப்பட்டன. இது ஊழியர்களின் நலன், திறன் மேம்பாடு மற்றும் உள்ளக செயல்பாடுகளுக்கு செஸ் நிதி	அனைத்து அத்தியாவசியமற்ற செலவினங்களும் கண்டிப்பாக நியாயப்படுத்தப்பட வேண்டுமென் பதுடன் செலவு குறைந்த முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இல. 01/2024 இன் விதிகளுடன் சீரமைக்கப்பட வேண்டும்.

வளங்களைப் பயன்படுத்துவதை அங்கீகரிக்கிறது. மனித மூலதனம் மற்றும் செயல்பாட்டுத் தேவைகளுடன் பொருளாதார விவேகத்தை சமநிலைப்படுத்த இந்த நடவடிக்கைகள் நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்டன.

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
SEC சட்டத்தின் பிரிவுகள் 16(கொ) மற்றும் 16(கெ) இன் படி, SEC சட்டம், பிரமாணங்கள், விதிகள், உத்தரவுகள் அல்லது அறிவுறுத்தல்களை மீறுவதாகக் கூறப்படும் சந்தை நிறுவனங்கள், இடைத்தரகர்கள், பதிவுசெய்யப்பட்ட நபர்கள், பட்டியலிடப்பட்ட பொது நிறுவனங்கள் மற்றும் பட்டியலி டப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களை விசாரிக்கவும் விசாரணைகளை நடத்தவும், தேவையான அமுலாக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது. இருப்பினும், கணிசமான எண்ணிக்கையிலான விசாரணை வழக்குகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. 2025 ஆகஸ்ட் 06 நிலவரப்படி, ஏழு வழக்குகள் 5–7 ஆண்டுகளாகவும், ஒரு வழக்கு 2 ஆண்டுகளாகவும் நிலுவையில் உள்ளன. விசாரணைகளை இறுதி செய்வதில் ஏற்படும் இத்தகைய தாமதங்கள், ஒழுங்குமுறை இணக்கத்தை அமுல்படுத்தும் ஆணைக்குழுவின் திறனை மோசமாக பாதிப்பதுடன், சந்தை நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தி ஆணைக்குழுவின் சாத்தியமான சட்ட மற்றும் நற்பெயர் கெட்டுப்போகின்ற அபாயங்களை ஏற்படுத்தியுள்ளது.	2024 ஆம் ஆண்டில், SEC மொத்தம் 62 விசாரணைகளில் 36 விசாரணைகளை முடித்தது (2023 முதல் முன்னெடுக்கப்பட்ட 55 விசாரணைகள் மற்றும் அந்த ஆண்டில் ஏழு புதிய விசார ணைகள் தொடங்கப்பட்டன). சந்தையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் புதிய விசாரணைகளை நிர்வகிக்கும் அதே வேளையில், பழைய விசாரணைகளை முடிக்க SEC விடாமுயற்சியுடன் செயல்பட்டு வருகிறது. எடுத்துக்காட்டாக, 2024 ஆம் ஆண்டில், ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் இருந்த 11 விசாரணைகள் முடிக்கப்பட்டன.	சரியான நேரத்தில் அமுலாக்கம் மற்றும் மேம்பட்ட ஒழுங்குமுறை செயல்திறனை உறுதி செய்வதற்காக தெளிவான காலக்கெடு மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளை நிறுவுவதன் மூலம் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள விசாரணைகளை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3.3 கொள்வனவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	கொள்முதல் வழிகாட்டுதல்கள் - 2006 இன் பிரிவு 4.2(அ) மற்றும் (ஈ) இன் படி, கொள்முதல் நிறுவனம் (PE) ஆனது பிரதான கொள்முதல் திட்டத்தை (MPP) தயாரிக்க வேண்டுமென்பதுடன், இது குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு திட்டமிடப்பட்ட கொள்முதல் நடவடிக்கைகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இருப்பினும், ஆணைக்குழு பிரதான கொள்முதல் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை	தற்போது, SEC ஆண்டுதோறும் MPP ஐ தயாரிக்கிறது. இந்த அணுகுமுறை குறுகிய கால திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலை ஆதரிக்கும் அதே வேளையில், முன்னோக்கிச் செல்லும்போது, இணக்கத்தை உறுதி செய்வதற்கும் மூலோபாய கொள்முதல் திட்டமிடலை மேம்படுத்துவதற்கும் குறைந்தபட்சம் மூன்று ஆண்டு எல்லையை உள்ளடக்கிய ஒரு விரிவான MPP ஐ உருவாக்க SEC நடவடிக்கை எடுக்கும்.	தேசிய கொள்முதல் வழிகாட்டுதல்கள் மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	கொள்முதல் வழிகாட்டுதல்கள் - 2006 இன் பிரிவுகள் 4.2(இ) மற்றும் (உ) இன் படி, கொள்முதல் கையேட்டின் பிரிவு 4.2.1 இல் பரிந்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட வடிவமைப்பைப் பயன்படுத்தி உடனடியாக அடுத்த ஆண்டிற்கான கொள்முதல் நடவடிக்கைகள் விரிவாகத் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் ஆறு மாதங்களுக்கு மிகைக்காத இடைவெளியில் அது புதுப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2024 ஆம் ஆண்டிற்கான அத்தகைய கொள்முதல் திட்டத்தை ஆணைக்குழு பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் தயாரித்திருக்காததுடன், அதற்கேற்ப புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தொடர்ந்தும், கொள்முதல் கையேட்டுடன் இணங்குவதைப் பராமரிப்பதன் மூலம், பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஆறு மாதங்களுக்கு மிகைக்காத இடைவெளியில் புதுப்பிப்பதை SEC உறுதி செய்யும்.	- மேற்படி -

3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
பல சேவை நிலை ஒப்பந்தங்கள் (SLA) அவற்றின் செல்லுபடியாகும் காலங்கள் தொடங்கியதைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க தாமதங்களுடன் செயல்படுத்தப்பட்டன. நிலையான வருடாந்த பராமரிப்பு	விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை இறுதி செய்வதல் நடைமுறைக்கு வரும் தேதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே ஒப்பந்த விவாதங்கள் தொடங்கின. பேச்சுவார்த்தை செயல்முறை காலத்தை எடுத்திருந்த போதிலும்,	சேவைகளின் தொடர்ச்சியையும் ஒப்பந்தத் தேவைகளுக்கு இணங்குவதையும் உறுதி செய்வதற்காக அனைத்து சேவை நிலை ஒப்பந்தங்களும்

ஒப்பந்தம் 2 மாதங்கள் 18 நாட்களினாலும், DMS - பயன்பாட்டு மென்பொருள் பராமரிப்பு ஒப்பந்தம் 3 மாதங்களினாலும், நிலையான பராமரிப்பு ஒப்பந்தம் 3 மாதங்கள் 1 நாளினாலும், பராமரிப்பு ஒப்பந்தம் 1 மாதம் 21 நாட்களினாலும் மற்றும் உரிமம் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் 6 மாதங்கள் 18 நாட்களினாலும் தாமதமடைந் திருந்தது.	சேவை வழங்குநர்களுடன் ஒப்புக் கொள்ளப்பட்ட இறுதி ஒப்பந்த விதிமுறைகள் இறுதியில் இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்கு மிகவும் பயனுள் ளதாக இருந்தன. சேவை நிலை ஒப்பந்தங்களில் (SLA) கையெழுத்தி டுவதில் தாமதங்கள் இருந்தபோதிலும், இந்த காலகட்டத்தில் எந்தவொரு வழங்குனரிடமிருந்தும் எந்த சேவை இடையூறுகளும் ஏற்படவில்லை. மேலும், இந்த தாமதங்கள் இறுதி பயனர்களுக்கான கணினி செயல்திறன் அல்லது இயக்க நேரத்தை பாதிக்கவில்லை என்பதை DTD உறுதி செய்கின்றது. எதிர்காலத்தில், SLA ஒப்பந்தங்கள் அவற்றின் திட்டமிடப்பட்ட நடைமுறைக்கு முந்தைய தேதிகளுக்கு முன்பே இறுதி செய்யப்பட்டு கையொப்பமிடப்படுவதை உறுதி செய்வதற்கான மேலதிக நடவடிக்கை களுடன் ஒப்பந்த மதிப்பாய்வு செயல்முறை மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், SLA-க்கள் SEC விற்பனையாளர் முகாமைத்துவ தீர்வு மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.	அவற்றின் நடைமுறைக்கு வரும் தேதிகளுக்கு முன்பே இறுதி செய்யப்பட்டு செயல்படுத் தப்பட வேண்டும்.

3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ) 1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சட்டம், 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டம் மற்றும் தாபன விதிக் கோவையின் XXIX அத்தியாயம் ஆகியவற்றால் திருத்தப்பட்ட 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தல் சட்டத்தின் படி, SEC ஊழியர்கள் உட்பட அனைத்து பொது அதிகாரிகளும் நியமனத்தின் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய ஆரம்ப அறிவிப்பையும், அதன் பின்னர் அவ்வப்போது புதுப்பிப்புகளையும்	ஜுன் மாத இறுதியில் ஊழியர்களிடமிருந்து வருடாந்த அறிவிப்புகள் சேகரிக்கப்படும் என்பதை SEC உறுதிப்படுத்து கிறது, இது ஏப்ரல் 1 முதல் அடுத்த ஆண்டு மார்ச் 31 வரையிலான காலத்தை உள்ளடக்கியது. இருப்பினும், அறிவிப்பு காலத்தில் இன்னும் கடமைகளை ஏற்காத ஊழியர்களுக்கு இந்தத் தேவை பொருந்தாது. அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது.	சொத்து மற்றும் பொறுப்பு வெளிப்படுத்தல் படிவங்கள் அனைத்து ஊழியர்களிடமிருந்தும் படிவம் 261 ஐப் பயன்படுத்தி பெறப்பட வேண்டும், மேலும் சட்டப்பூர்வ தேவைகளுக்கு முழுமையாக இணங்குவதை உறுதிசெய்ய அவர்களின் தனிப்பட்ட கோப்புகளில் முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

	சமர்ப்பிக்க வேண்டும். தாபன விதியின் படி, இந்த அறிவிப்புகள் நியமனத்தின் போது பரிந்துரைக்கப்பட்ட படிவம் பொது 261 ஐப் பயன்படுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ப துடன் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் சட்டப்பூர்வ கடமைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக ஊழியர்களின் தனிப்பட்ட கோப்புகளில் பராமரிக்கப்பட வேண்டும். இருப்பினும், தெரிவுக் கணக்காய்வின் போது பரிசோதிக்கப்பட்ட எந்தவொரு பணியாளரின் தனிப்பட்ட கோப்புகளிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பிரகடனப் படிவம் சேர்க்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், இது சட்டப்பூர்வ மற்றும் உள்ளக கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகளுடன் இணங்கவில்லை என்பதைக் குறிக்கிறது.	எதிர்காலத்தில், CIABOC நடைமுறைகளைப் பின்பற்றி, சட்டப்பூர்வ இணக்கத் தேவைகளுடன் ஒத்துப்போகும் அதே வேளை, 2025 ஜூலை முதல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களின் தனிப்பட்ட கோப்புகளிலும் சொத்து மற்றும் பொறுப்பு வெளிப்படுத்தல் படிவங்கள் சேர்க்கப்படுவதை நிறுவனம் உறுதி செய்யும்.	
(ஆ)	இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 165(1) மற்றும் பிரிவு 165(2) இன் கீழ் தேவைப்படும் உறுதிமொழி அல்லது வெளிப்படுத்துகை, தெரிவுக் கணக்காய்வின் போது பரிசோதிக்கப்பட்ட எந்தவொரு ஊழியரின் தனிப்பட்ட கோப்புகளிலும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. எதிர்கால நியமனங்களிலிருந்து அமலுக்கு வரும் வகையில், அனைத்து புதிய ஊழியர்களாலும் கையொப்பமிடப்பட்ட ஒரு உறுதிமொழி ஆவணம் ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில் சேர்க்கப்படுவதை ளுநுஊ உறுதி செய்யும்.	அரசியலமைப்பின் பிரிவுகள் 165(1) மற்றும் 165(2) இன் கீழ் தேவைப்படும் உறுதிமொழி அல்லது வெளிப்படுத்துகை ஆவணங்கள், அனைத்து ஊழியர்களிடமிருந்தும் பெறப்பட்டு, அரசியலமைப்பு தேவைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்ய அவர்களின் தனிப்பட்ட கோப்புகளில் பராமரிக்கப்பட வேண்டும்.
(இ)	மூலதன சந்தை அபிவிருத்திப் பணிப்பாளர், கண்காணிப்பு இயக்குநர், வெளி உறவுகள் மற்றும் மூலதன சந்தை கல்வி இயக்குநர், மனிதவள இயக்குநர் மற்றும் மேற்பார்வை இயக்குநர் உள்ளிட்ட பல முக்கிய பணிப்பாளர் பதவிகள் 2025 ஜூலை 31 நிலவரப்படி 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை வெற்றிடமாக இருந்தன. மேலும், 2024 ஜூன் 04 அன்று இடர் குழு ஒரு தலைமை இடர் அதிகாரியை உடனடியாக நியமிக்க	மேற்கூறிய அனைத்து வெற்றிடங்களையும் நிரப்ப SEC விண்ணப்பங்களை அழைத்திருந்ததுடன் முதற்கட்ட நேர்காணல்களை நடத்தியது. இருப்பினும், அனைத்து குறுகிய பட்டியலிடப்பட்ட வேட்பாளர்களும் இந்த பதவிகளுக்கு ஏற்கனவே உள்ள SEC சம்பள அளவுகளை விட அதிக சம்பளத்தை எதிர்பார்த்தனர். இந்த	ஆணைக்குழுவின் பணியாளர்கள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு, ஒப்புதலுடன் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

	முடிவு செய்த போதிலும், இந்தப் பதவியும் நிரப்பப்படாமல் இருந்தது. மூலோபாய ரீதியாக முக்கியமான பதவிகளில் நீடித்துக் காணப்படுகின்ற இந்த வெற்றிடங்கள் ஆணைக்குழுவின் நிர்வாகம், இடர் முகாமைத்துவம் மற்றும் ஒட்டுமொத்த செயல்பாட்டு செயலாற்றலை மிக மோசமாக பாதித்துள்ளது.	காலியிடங்களின் தாக்கம் பிரிவுகளில் குறைக்கப்பட்டுள்ளது, ஏனெனில் அவை செயல்படுதல்/மூடுதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், தலைமை இடர் அதிகாரி பதவியும் இந்த ஆண்டுக்குள் விளம்பரப்படுத் தப்படும்.	
(ஈ)	முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் 2023 டிசம்பர் 31 அன்று சண்டே அப்சர்வர், topjobs.lk மற்றும் SEC வலைத்தளத்திலும் வெளியிடப்பட்ட விளம்பரங்கள் மூலமாக வரவேற்கப்பட்டன. வெளியிடப்பட்ட விளம்பரங்களின் படி இந்தப் பதிவிக்கு உதவி முகாமையாளர்/நிர்வாக மட்டத்தில் குறைந்தபட்சம் எட்டு ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். இருப்பினும், 2025 பெப்ரவரி 13 தேதியிட்ட ஆணைக்குழு பத்திர இல. 510/14 இன் படி, மூலதனச் சந்தைகளில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் அனுபவம் இருக்க வேண்டும் என்ற மேலதிக தேவை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இது வெளியிடப்பட்ட விளம்பரங்களில் பிரதிபலிக்கவில்லை. இதன் விளைவாக, விளம்பரப்படுத்தப்பட்ட அளவுகோல்களை பூர்த்தி செய்த வெளிப்புற விண்ணப்பதாரர்கள் வேறுவிதமாக தகுதி பெற்றிருந்தாலும் நிராகரிக்கப்பட்டனர், அதே நேரத்தில் சிரேஷ்ட உதவி முகாமையாளர்களாக இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான அனுபவம் உள்ளவர்கள் உட்பட உள்ளக விண்ணப்பதாரர்கள் முகாமையாளர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். ஆட்சேர்ப்பு அளவுகோல்களில் உள்ள இந்த முரண்பாடு தேர்வு செயல்முறையின் நியாயத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்த ஐயப்பாடுகளை தோற்றுவிப்பதுடன், தகுதிவாய்ந்த வெளிப்புற	விண்ணப்பதாரர்களை பட்டியலிடும் போது, அதிக மூலதன சந்தை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்க SEC முடிவு செய்தது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் உதவி முகாமையாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலையில் உள்ள 29 ஊழியர்கள் இராஜினாமா செய்ததால், நடுத்தர அளவிலான நிர்வாகத்தை வலுப்படுத்த வேண்டிய அவசரத் தேவையால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.	வெளியிடப்பட்ட விளம்பரங்களில் அனைத்து தகுதித் தேவைகளும் தெளிவாக இணைக்கப்பட்டு, நியாயம், வெளிப்படைத்தன்மை மற்றும் நிறுவப்பட்ட கொள்கைகளுடன் இணங்குவதை உறுதிசெய்ய ஆட்சேர்ப்பு செயல்முறை முழுவதும் தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும்.

	வேட்பாளர்களை விலக்குவதன் மூலம் தகுதி அடிப்படையிலான ஆட்சேர்ப்பைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. மேலும் இந்த செயல்முறை நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் விளம்பரப்படுத்தப்பட்ட அளவுகோல்களுடன் முழுமையாக இணங்காததால், ஆணைக்குழுவின் நற்பெயர் பாதிக்கப்படுதல் மற்றும் நிர்வாக அபாயங்களுக்கு உட்பட்டுள்ளது.		
(உ)	பதவி வாரியாக மாதத்திற்கு கூடுதல் நேரக் கொடுப்பனவுகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரம்பு எதுவும் நிறுவப்படவில்லை. கூடுதல் நேரத்திற்கான வரையறுக்கப்பட்ட உச்சவரம்பு அல்லது வழிகாட்டுதல் இல்லாதது, சீரற்ற அல்லது அதிகப்படியான கொடுப்பனவுகள், வெளிப்படைத்தன்மை இல்லாமை மற்றும் பட்ஜெட் விதிகளுடன் தவறான சீரமைப்பு ஆகியவற்றிற்கு வழிவகுத்திருக்கலாம்.	நிர்வாகமற்ற ஊழியர்கள் மட்டுமே மேலதிக நேரக் கொடுப்பனவுக்கு உரிமையுடையவர்களாவதுடன் எதிர்காலத்தில், மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரம்புகள் அல்லது உச்சவரம்புகளை SEC அமுல்படுத்தும்.	லேதிக நேரக் கொடுப்பனவு களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவி வாரியான வரம்புகள் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.
(ஊ)	ஊதிய முறைமைக்கான அணுகல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் போதுமானதாக இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. குறிப்பாக, சிறந்த பாதுகாப்பு நடைமுறைகளுக்கு மாறாக, கணினி கடவுச்சொல் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டிருக் காமையால் அங்கீகரிக்கப்படாத அணுகல் மற்றும் கணக்கிணக்கம் செய்யப்பட்ட தரவு ஒருமைப்பாடு ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது. மேலும், ஊதிய முறைமைக்கு ஒரே ஒரு கடவுச்சொல் மட்டுமே உள்ளதுடன் நிதி பணிப்பாளர் அல்லது மற்றொரு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் இரண்டாம் நிலை அணுகல் நற்சான்றிதழ் பாதுகாப்பாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான எந்த நடைமுறையும் நிறுவப்பட்டிருக்கவில்லை. அணுகல் கட்டுப்பாட்டில் உள்ள இந்த பலவீனங்கள் தவறான பயன்பாட்டின் அபாயத்தை	சம்பளப் பட்டியல் அமைப் பின் கடவுச்சொல் சமீபத்தில் புதுப்பிக்கப்பட்டதுடன் சிறந்த பாதுகாப்பு நடைமுறைக ளுக்கு ஏற்ப 90 நாள் சுழற்சியில் கடவுச்சொல்லை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது, அங்கீகரிக்கப்படாத அணுக லுக்கான வெளிப்பாட்டைக் குறைக்க, அணுகலானது ஒரு அங்கீகரிக்கப்பட்ட பயனருக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட் டுள்ளது, இருப்பினும் இரண்டாம் நிலை அணுகல் சான்று இல்லாதது தற்போதைய சம்பளப் பட்டியல் அமைப்பில் ஒரு வரம்பை அளிக்கிறது என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இணக்கத்தை மேம்படுத்தும், தரவு பாதுகாப்பை மேம்படுத்தும் மற்றும் தற்போதைய அமைப்பு	போதுமான பாதுகாப்பு மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்காக, ஊதிய முறையை அணுகுவதை நிர்வகிக்கும் உள்ளளக் கட்டுப் பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

அதிகரிப்பதுடன் ஊதிய தரவின் நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன.	தடைகளை நிவர்த்தி செய்யும் ஒருங்கிணைந்த ஊதிய செயல்பாட்டுடன் கூடிய விரிவான மனித வள தகவல் அமைப்பை (HRIS) செயல்படுத்த, 2025 செப்டம்பர் 16 அன்று நடைபெற்ற அதன் 521வது கூட்டத்தில் ஆணைக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது, இந்த ஆண்டு இறுதிக்குள் முழுமையாக செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3.6 வாகனத் தொகுதியின் பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
ஒதுக்கப்பட்ட வாகனங்களின் பயன்பாடு தொடர்பான நடைமுறைகள் மற்றும் பொறுப்புகளை கோடிட்டுக் காட்டும் முறையான ஆவணத்தை இந்த நிறுவனம் பராமரிக்காததுடன் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனி பொறுப்பான நபரை அது ஒதுக்கயிருக்கவில்லை. இந்த பலவீனங்கள் தவறாகப் பயன்படுத்துதல், பொறுப்புணர்வு இல்லாமை மற்றும் வாகன பயன்பாட்டைக் கண்காணிப்பதில் உள்ள சிரமங்களை அதிகரிக்கின்றன.	தற்போதுள்ள ஆவணம் பொதுவான வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான நிபந்தனை களை மட்டுமே கோடிட்டுக் காட்டுவதுடன் ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்குப் பொருந்தக் கூடிய நடைமுறைகளை குறிப்பா கக் குறிப்பிடவில்லை என்பதை நிறுவனம் ஒப்புக்கொள்கிறது. இந்தக் குறைபாட்டைச் சரிசெய்ய, பொதுவான மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனங்கள் இரண்டிற்கும் விரிவான நடைமுறைகள், பொறுப் புகள் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்கிய ஒரு திருத்தப்பட்ட ஆவணம் தற்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது. இடைக்காலத்தில், ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு வாகனமும் அதன் சரியான பயன்பாடு, பராமரிப்பு மற்றும் அறிக்கையிடலுக்குப் பொறுப்பான ஒரு நியமிக்கப்பட்ட ஓட்டுநருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட கொள்கை முறையாக அங்கீகரிக்கப்படும் வரை பொறுப்புணர்வை உறுதி செய்வதற்கும் வாகன கண்காணிப்பு மற்றும்	ஒதுக்கப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான நடைமுறை கள் மற்றும் பொறுப்புகளை கோடிட்டுக் காட்டும் ஒரு முறையான ஆவணம் அங்கீகரி க்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டு மென்பதுடன், பொறுப்புக் கூறல் மற்றும் பயனுள்ள கண்காணிப்பை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு வாகனத்திற்கும் தெளிவான பொறுப்பு ஒதுக்கப்பட வேண்டும்.

கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைப்பதற்கும் இந்த இடைக்கால ஏற்பாடு செயல்படுத்தப்பட்டுள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உண்மையான செலவினங்களுக்கு இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக திறம்பட பயன்படுத்தப்படவில்லை என்பதைக் குறிக்கிறது. உறுப்பினர் சந்தாவில் 74 சதவீத மாறுபாடும், பணியாளர்களின் வெளிநாட்டு பயிற்சி மற்றும் மாநாடுகளில் 61 சதவீத மாறுபாடும், மூலதன சந்தை மேம்பாட்டு செலவுகளில் 53 சதவீத மாறுபாடும் பதிவாகியுள்ளன, உண்மையான செலவினம் பாதீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை விட கணிசமாகக் குறைவாக உள்ளது. பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் மூலதன சந்தை மேம்பாட்டின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இந்த பகுதியில் நிதியின் குறைவான பயன்பாடு குறிப்பாக கவலைக்குரியது. மேற்குறித்த மூன்று பகுதிகளுக்கான பாதீட்டு மதிப்பீடுகள் உண்மையான தேவைகளுடன் ஒப்பிடும்போது கணிசமாக மிகைப்படுத்தப்பட்டிருப் பதை இந்த வேறுபாடுகள் சுட்டிக்காட்டுகின்றன.	பாதீடு செய்யப்பட்ட மற்றும் உண்மையான செலவுகளுக்கு இடையிலான வேறுபாடு முக்கியமாக நிகழ்வு ஒத்தி வைப்புகள், இரத்துசெய்தல்கள், ஊழியர்களின் வருவாய் மற்றும் தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இல. 01/2024 ஆல் விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சி மீதான கட்டுப்பாடுகள் காரணமாகும். பொது விழிப்புணர்வு நடவடிக்கை கள் மற்றும் BBO & OMS திட்டம் உட்பட பல திட்டமிடப்பட்ட திட்டங்கள் மற்றும் முயற்சிகள் ஒத்திவைக்கப்பட்டன அல்லது செயல்படுத்தப்பட வில்லை, அதே நேரத்தில் டிஜிட்டல் விநியோகம் மற்றும் குறைந்த பங்கேற்பு என்பன கல்வித் திட்ட செலவுகளைக் குறைத்தன. சில பயிற்சி களிற்கான வரவு செலவுத் திட்டங்கள் சற்று அதிகமாக இருந்தபோதிலும், ஒட்டுமொத்த மாக செலவினம் குறைவாக இருப்பது செயல்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் மூலோபாய மறுஒதுக்கீடுகள் இரண்டையும் பிரதிபலிக்கிறது, 2025 இல் தொடர்ச்சியை ஆதரிக்க 2024 இல் அடித்தளம் அமைக்கப்பட்டது.	குறிப்பாக மூலதனச் சந்தை மேம்பாடு போன்ற முக்கியமான பகுதிகளுக்கு ஒதுக்கீடுகள் யதார்த்தமானதாகவும் முழுமை யாகப் பயன்படுத்தப்படுவதையும் உறுதிசெய்ய பாதீட்டுத் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு வலுப்படுத் தப்பட வேண்டும்.